

# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..!




## கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலுடன் தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட அளவில் நடத்திய **'என் உயிரினும் மேலான..!'** பேச்சுப் போட்டியில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். அந்தப் போட்டிகளில் 913 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், அடுத்த கட்டமாக மண்டல அளவிலான போட்டிகள் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறவுள்ளன.

**13-10-2024, ஞாயிற்றுக்கிழமை**

| வ. எண் | வருவாய் மாவட்டம் | போட்டி நடைபெறும் இடம் | நடுவர்கள் | ஒருங்கிணைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | சென்னை, செங்கல்பட்டு | அன்பகம், தி.மு.க. இளைஞர் அணி அலுவலகம். 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-18. | வழக்கறிஞர் அருள்மொழி, எஸ்.கே.பி.கருணா, இந்திரகுமார் தேரடி | எஸ்.ஜோயல் |
| 2 | விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, புதுச்சேரி | டி.கே.பி. திருமண மண்டபம், திண்டிவனம்-மரக்காணம் சாலை, திண்டிவனம், விழுப்புரம்-1. | பேராசிரியர் சுப.வீரபாண்டியன், மருத்துவர் ஷஃபி சுலைமான், தமிழ் காமராசன் | ப.அப்துல் மாலிக் |
| 3 | காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை | கே.பி.ஜெ.மஹால், திமிரி, மருதம்பாடி, இராணிப்பேட்டை-21. | முனைவர் சபாபதி மோகன், மில்டன், மருத்துவர் ஹபீஸ் | க.பிரபு |
| 4 | நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் | சப்தகிரி பொறியியல் கல்லூரி, சேலம்-பெங்களூரு நெடுஞ்சாலை, பெரியன்னஹள்ளி, தருமபுரி-5. | மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ., வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, டான் அசோக் | பி.எஸ்.சீனிவாசன் |
| 5 | கரூர், திருப்பூர், கோவை, ஈரோடு, நீலகிரி | தளபதி அரங்கம், கலைஞர் அறிவாலயம், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அலுவலகம், திருப்பூர்-4. | கோவி.லெனின், வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, அமுதரசன் | கே.இ.பிரகாஷ், எம்.பி. |
| 6 | திருச்சி, அரியலூர், பெரம்பலூர், திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்கால் | பிலோமினா ஷாப்பிங் மால், வினோதகன் மருத்துவமனை எதிரில், அருளானந்தா நகர், மேற்கு விரிவாக்கம், தஞ்சாவூர்-7 | திண்டுக்கல் லியோனி, மருத்துவர் யாழினி, பொள்ளாச்சி சித்திக் | நா.இளையராஜா, சி.ஆனந்தகுமார் |
| 7 | மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் | பி.ஆர்.மஹால், ஆலாத்தூர், ஊமச்சிக்குளம்-கடச்சனேந்தல் சாலை, மதுரை. | நாஞ்சில் சம்பத், எம்.எம்.அப்துல்லா எம்.பி., வே.மதிமாறன் | ஜி.பி.ராஜா |
| 8 | இராமநாதபுரம், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, | சுப்புலட்சுமி திருமண மண்டபம், பேருந்து நிலையம் அருகில், நாங்குநேரி, திருநெல்வேலி. | பொன்.முத்துராமலிங்கம், செந்தில்வேல், சூர்யா கிருஷ்ணமூர்த்தி | இன்பா ஏ.என்.ரகு |

**பேச்சுப் போட்டிக்கான விதிமுறைகள் :**

● மண்டல அளவிலான பேச்சுப்போட்டிகள் காலை 9 மணிக்கே தொடங்கும். எனவே முதல் நாளே நடுவர்களும் பங்கேற்பாளர்களும் போட்டி நடைபெறும் பகுதிக்கு வந்துவிடவேண்டும். ● பங்கேற்பாளர்கள் தங்களுடன் ஒருவரை அழைத்து வரலாம். அவர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ● போட்டி நடைபெறும் அன்று, காலை மற்றும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ● பங்கேற்பாளர்கள் கீழ்க்கண்ட ஐந்து தலைப்புகளில் மூன்று தலைப்புகளைத் தங்கள் விருப்பத் தலைப்பாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

● **என்றென்றும் பெரியார்-ஏன்?** ● **அண்ணாவும் மாநில சுயாட்சியும்** ● **கலைஞர் - நவீன தமிழ்நாட்டின் சிற்பி** ● **திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின்** ● **தமிழ்நாட்டுக் குடும்பங்களில் தி.மு.க**

மூன்று விருப்பத் தலைப்புகளில் நடுவர்கள் தரும் ஒரு தலைப்பில் போட்டியாளர்கள் பேச வேண்டும்.

● பேசுவதற்கான நேரம் ஐந்து நிமிடங்கள். மூன்று நிமிடங்களில் முதல் எச்சரிக்கை மணி ஒலிக்கும். இரண்டாம் எச்சரிக்கை மணி ஒலித்ததும் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

**போட்டியில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் அன்பும் வாழ்த்தும்.**

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 08–10–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

---

## முதலமைச்சர் கோப்பை - 2024 போட்டிகள்

# மாநில விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்கள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, அக்.13-

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடத்தப்படும் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை - 2024 மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 10.09.2024 அன்று சிவகங்கை மாவட்ட விளையாட்டு அரங்கில் தொடங்கி வைத்தார். மாவட்ட, மண்டல அளவில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுப் பிரிவினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் என மொத்தம் 11,56,566 நபர்கள் 36 வகையான விளையாட்டு போட்டிகளில், 168 பிரிவுகளில் கலந்து கொண்டனர்.

சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் செங்கல்பட்டு ஆகிய நகரங்களில் அக்டோபர் 4ஆம் தேதி முதல் 24ஆம் தேதி வரை, மாவட்ட, மண்டல அளவில் வெற்றி பெற்ற 33,000 நபர்கள் பங்கு பெறும், மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை - 2024 போட்டிகள், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் 04.10.2024 சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் தொடங்கி வைக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றது.

மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் நேற்று முன்தினம் (11.10.2024) பதக்கம் பெற்றவர்களின் விபரங்கள்:

விளையாட்டு: கோ-கோ பிரிவு: (பள்ளி மாணவர்) இடம்: மாவட்ட விளையாட்டு வளாகம் மதுரை.

சென்னை - தங்கம், கோயம்புத்தூர் - வெள்ளி, ஈரோடு - வெண்கலம்.

விளையாட்டு: கோ-கோ பிரிவு: (பள்ளி மாணவியர்) இடம்: மாவட்ட விளையாட்டு வளாகம் மதுரை.

சிவகங்கை - தங்கம், கிருஷ்ணகிரி - வெள்ளி, கன்னியாகுமரி - வெண்கலம்.

விளையாட்டு: ஜூடோ பிரிவு: பள்ளி மாணவியர் (57kg) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

வி. தில்ரூபா - சென்னை - தங்கம், பி.கிருத்திகா - சென்னை - வெள்ளி, சி. தாரா ஸ்ரீ - சென்னை - வெண்கலம், எம்.பிரதீபா - திருப்பூர் - வெண்கலம்.

விளையாட்டு: ஜூடோ பிரிவு: பள்ளி மாணவர் (55kg) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

எஸ். பவினேஷ் - சென்னை - தங்கம், வி.அருணாச்சலம் - சென்னை - வெள்ளி, எஸ். பிராஜிதன் - மதுரை - வெண்கலம், கே. ராம்குமார் - திருப்பூர் - வெண்கலம்.

விளையாட்டு: ஜூடோ பிரிவு: பள்ளி மாணவர் (60kg)இடம்: நேரு விளையாட்டரங்கம்.

ஏ. அஸ்வின் - சென்னை - தங்கம், பி. பிரதீஷ்- மதுரை - வெள்ளி, எஸ்.பிரதீஷ்- திருப்பூர் - வெண்கலம், எம்.ஆர். விஷ்வா - சென்னை - வெண்கலம்.

விளையாட்டு: ஜூடோ பிரிவு: பள்ளி மாணவர் (50kg)இடம்: நேரு விளையாட்டரங்கம்.

எஸ்.அஜித் குன்வோர் - சென்னை - தங்கம், வெங்கடேச பெருமாள் - சென்னை - வெள்ளி, ஏ.ஆகாஷ் - சென்னை - வெண்கலம், எஸ்.தர்ஷன் - மதுரை- வெண்கலம்.

விளையாட்டு: ஜூடோ பிரிவு: பள்ளி மாணவியர்(52kg) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

எஸ்.லத்திகா - சென்னை - தங்கம், எம்.மகாலட்சுமி - திருச்சி - வெள்ளி, சி. காவியா - சென்னை - வெண்கலம், காவியா - திருப்பூர் - வெண்கலம்.

விளையாட்டு: ஜிம்னாஸ்டிக்ஸ், பிரிவு: (Balancing Beam) (பள்ளி மாணவியர்), இடம்: AGB Complex, வேளச்சேரி.

யாழினி ராஜேஷ் - சென்னை - தங்கம், எம். தமிழரசி - ஈரோடு - வெள்ளி, கே. சஞ்சனா - சென்னை - வெண்கலம்.

விளையாட்டு: ஜிம்னாஸ்டிக்ஸ், பிரிவு: (Table Vault) (பள்ளி மாணவர்) இடம்: AGB Complex, வேளச்சேரி

இளையபெருமாள் - சேலம் - தங்கம், எஸ். முஹம்மது அயாஸ் - மதுரை - வெள்ளி, எஸ். வி.பிரானேஷ் - சென்னை - வெண்கலம்.

விளையாட்டு: ஜிம்னாஸ்டிக்ஸ், பிரிவு: Parallel Bars,பள்ளி மாணவர்இடம்: AGB Complex, வேளச்சேரி

ஜி.வி. ஜனகவியன் - செங்கல்பட்டு - தங்கம், கே. பிரபஞ்சன் - சேலம் - வெள்ளி, ஜி.வி. கவி மாறன் - செங்கல்பட்டு - வெண்கலம்.

விளையாட்டு: கைப்பந்தாட்டம் பிரிவு: (பள்ளி மாணவியர்) இடம்: மாவட்ட விளையாட்டு வளாகம் திருச்சி.

சேலம் - தங்கம், திருவண்ணாமலை - வெள்ளி, திண்டுக்கல் - வெண்கலம்.

விளையாட்டு: கைப்பந்தாட்டம் பிரிவு: (பள்ளி மாணவர்)இடம்: மாவட்ட விளையாட்டு வளாகம் திருச்சி.

விருதுநகர் - தங்கம், திண்டுக்கல் - வெள்ளி, கிருஷ்ணகிரி - வெண்கலம்

விளையாட்டு: ஸ்குவாஷ் பள்ளி மாணவர் பிரிவு: மகளிர் ஒற்றையர், இடம்: நேரு பூங்கா சென்னை.

என்.அனன்யா - சென்னை - தங்கம், கிரிஜா - திருநெல்வேலி - வெள்ளி, ஷகனா கலைவாணன் -திருவள்ளூர் - வெண்கலம்.

விளையாட்டு: ஸ்குவாஷ் பள்ளி மாணவர் பிரிவு:, ஆடவர் ஒற்றையர்,இடம்: நேரு பூங்கா சென்னை

கே.எஸ். ஹரிஹரன்த் - சென்னை - தங்கம், சிவன் அகர்வால் - வேலூர் - வெள்ளி, எஸ்.லோகேஷ் - காஞ்சிபுரம் - வெண்கலம்.

விளையாட்டு: ஸ்குவாஷ் பள்ளி மாணவியர் பிரிவு:, மகளிர் இரட்டையர்,இடம்: நேரு பூங்கா சென்னை

டி. நித்ய ஸ்ரீ, டி. பிரியா தர்ஷினி - சேலம் - தங்கம், நந்திகா ஸ்ரீ, ஷகனா கலைவாணன் - திருவள்ளூர் - வெள்ளி, எஸ். சங்கமித்ரா, எஸ்.ஆர்.சக்தி பிரியா - ஈரோடு - வெண்கலம்.

விளையாட்டு: ஸ்குவாஷ் பள்ளி மாணவர் பிரிவு:, ஆடவர் இரட்டையர் இடம்: நேரு பூங்கா சென்னை

கே.எஸ். ஹரிஹரன்த், ஷராவின் ஏ. ஜெயின் - சென்னை - தங்கம், ஜோயல் தினகரன், ஜோஸ்வா வசிகரன் - தூத்துக்குடி - வெள்ளி, இஜாஜ் முஹமது, இஜாத் - கோயம்புத்தூர் - வெண்கலம்.

குறிப்பு: ஜூடோ போட்டிகளில் பள்ளி மற்றும் கல்லூரி பிரிவுகளில் மூன்றாம் பரிசுக்கு இணையாக நான்காம் பரிசு வழங்கப் படுகிறது.

பதக்கப் பட்டியல் முதலமைச்சர் கோப்பை 2024 (11.10.2024)

| வ.எண் | மாவட்டம் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 20 | 10 | 16 | 46 |
| 2 | சேலம் | 7 | 5 | 4 | 16 |
| 3 | ஈரோடு | 7 | 4 | 6 | 17 |
| 4 | செங்கல்பட்டு | 7 | 1 | 2 | 10 |
| 5 | தஞ்சாவூர் | 3 | | 1 | 4 |
| 6 | கோயம்புத்தூர் | 2 | 5 | 4 | 11 |
| 7 | திருச்சிராப்பள்ளி | 2 | 2 | 3 | 7 |
| 8 | தேனி | 2 | 1 | 2 | 5 |
| 9 | சிவகங்கை | 2 | 1 | | 3 |
| 10 | மதுரை | 1 | 5 | 4 | 10 |
| 11 | புதுக்கோட்டை | 1 | 3 | 1 | 5 |
| 12 | நாமக்கல் | 1 | 2 | | 3 |
| 13 | விருதுநகர் | 1 | 1 | | 2 |
| 14 | பெரம்பலூர் | 1 | | | 1 |
| 15 | திருவள்ளூர் | | 3 | 5 | 8 |
| 16 | திருநெல்வேலி | | 3 | | 3 |
| 17 | திருவண்ணாமலை | | 2 | | 2 |
| 18 | கடலூர் | | 1 | 3 | 4 |
| 19 | தூத்துக்குடி | | 1 | 2 | 3 |
| 20 | கன்னியாகுமரி | | 1 | 1 | 2 |
| 20 | காஞ்சிபுரம் | | 1 | 1 | 2 |
| 20 | வேலூர் | | 1 | 1 | 2 |
| 20 | கிருஷ்ணகிரி | | 1 | 1 | 2 |
| 20 | திண்டுக்கல் | | 1 | 1 | 2 |
| 25 | தென்காசி | | 1 | | 1 |
| 25 | தர்மபுரி | | 1 | | 1 |
| 27 | திருப்பூர் | | | 5 | 5 |
| 28 | விழுப்புரம் | | | 1 | 1 |
| 28 | திருவாரூர் | | | 1 | 1 |

இவ்வாறு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்குறிப்பிடப்பட்டுள்ளது.